மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2022) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2022), மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2022)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 9–5–2022 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2022 மே 10]

பிற்பகல் 1-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் ஏற்கெனவே சொன்ன கருத்தை நான் இதில் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) பேசுங்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற சட்டத்தில் குடிநீர் வழங்கல் துறை பற்றி சொன்னார்கள். அதுவும் வருகிறது, அதேபோல, வருடா வருடம், சென்னை மாநகராட்சியில் அதனை செய்யலாம்; சென்னை குடிநீர் வழங்கல் துறை செய்யலாம். அதைப் பற்றியும்* mention *செய்தோம். இதில் இன்னொரு திருத்தத்தைக் கேட்கிறோம். தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, 1-8-2000-ல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் இடைநிறுத்தம் செய்யப்பட்டு, இன்று வரை தொடர்ந்து இடைநிறுத்தத்தில் உள்ளது. நீக்கறவு செய்யப்பட்ட மாநகராட்சி சட்டங்கள், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட மாநகராட்சி சட்டங்கள் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. 2000 ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தத்தில் உள்ள 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் மீண்டும் புதிதாக நடைமுறைக்குக் கொண்டுவந்தால் அதில் ஒரு பிரிவினர் பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். 2000 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இடைநிறுத்தம் செய்யப்பட்ட 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் குறித்து புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அவற்றில் உள்ள அரசு ஊழியர் அமைப்புச் சங்கங்களின் கருத்துகளைப் பெற வேண்டும். சென்னைக்குத் தனி, கோயம்புத்தூருக்குத் தனி, மதுரைக்குத் தனி என தனித் தனி சட்டமாகத்தான் இதுவரை இருந்துள்ளது. 2000 ஆம் ஆண்டிற்குப்பின் தி.மு.க. ஆட்சிக்கு வந்த 2006 முதல் 2011 வரையிலான காலத்தில்கூட இந்தச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை. தற்போது மீண்டும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள். 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தினை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி சட்டம் 1919 ஆம் ஆண்டு மற்றும் 1920 ஆம் ஆண்டுதான் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் —முழுமையான நகராட்சிச் சட்டங்கள் வந்தன. அவைதான் இதுவரையில் நடைமுறையில் இருந்து கொண்டிருக்கின்றன. 1998 ஆம் ஆண்டு மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் நகராட்சிக்கு என்று தனியாக ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அப்படி கொண்டு வரப்பட்டு அதனுடைய rules frame செய்யவேண்டியிருந்தது. 2000 ஆம் ஆண்டுதான் அதற்கான rules frame செய்யப்பட்டன. இதன் காரணமாக 1919 ஆம் ஆண்டு, 1920 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் அகற்றப்பட்டு, 1998 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கான rules frame செய்யப்பட்டு, 2000 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்துவிட்டது. சில நடைமுறை சிக்கல்கள் இருந்த காரணத்தினால் அப்படியே அந்தச் சட்டத்தினை நிறுத்தி வைத்துவிட்டு, 1919 ஆம் ஆண்டும், 1920 ஆம் ஆண்டும் போடப்பட்ட அந்தச் சட்டங்களே, நேற்றுவரை நடைமுறையில் இருந்தன. இப்போது புதிதாகப் போடப்பட்டிருக்கின்ற சட்டத்திருத்தங்கள் என்ன காரணத்திற்காகப் போடப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், நம் இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில்தான் அதிகமான நகர்ப்புற பகுதிகள் இருக்கின்றன; தினந்தோறும் வளர்ந்துகொண்டே வருகின்றன. அதிலே உடனுக்குடன் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதற்காக அங்கெல்லாம் பணிகள் நிரவப்பட வேண்டியிருக்கின்றன; மக்கள் ஓரிடத்தில் அதிகமாக இருக்கிறார்கள்; ஓரிடத்தில் குறைவாக இருக்கிறார்கள். எனவே, ஒரு மாநகராட்சிக்கு ஒரு சட்டம், இன்னொரு மாநகராட்சிக்கு இன்னொரு சட்டம் என்று இல்லாமல், தமிழ்நாடு முழுவதும் ஒரே மாதிரியான சட்டத்தைக் கொண்டு வருவதுதான் இந்த சட்டத் திருத்தத்தினுடைய நோக்கம். இதில் 30 திருத்தங்கள் வந்திருக்கின்றன. முழுவதையும் படிக்க நீண்ட நேரம் வேண்டும். எனவே, தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புற மக்களுக்குத் தேவையான அளவிற்குப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருகின்ற காரணத்தினால்தான் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். மக்கள்தொகை 10 ஆயிரத்திற்குக் குறைவில்லாமல், உள்ளாட்சியின் ஆண்டு வருவாய் ரூ.30 இலட்சத்திற்குக் குறைவில்லாமல் இருந்தால் பேரூராட்சி எனவும்; மக்கள்தொகை 30 ஆயிரத்திற்குக் குறைவில்லாமல் உள்ளாட்சியின் ஆண்டு வருவாய்

2022 மே 10] [திரு. கே.என். நேரு]

ரூ.50 இலட்சத்திற்குக் குறைவில்லாமல் இருந்தால் அது நகராட்சி எனவும்; மக்கள்தொகை 3 இலட்சத்திற்குக் குறைவில்லாமல், ஆண்டு வருவாய் ரூ.30 கோடிக்குக் குறைவில்லாமல் இருந்தால் மாநகராட்சி எனவும் அமைத்திட, உருவாக்கிட இந்தச் சட்டத் திருத்தம் வழிவகை செய்கிறது. எனவே, புதிய நகராட்சி உருவாக, புதிய பேரூராட்சி உருவாக இந்தச் சட்டத் திருத்தம் வழிவகை செய்கிறது. இன்னும் கூடுதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களே வரி வருவாயை நிர்ணயம் செய்துகொள்ளலாம். இன்னும் மேலே சொல்ல வேண்டுமென்று சொன்னால், அவர்களே ஒரு குழு அமைத்து, வரி கூடுதலாக இருந்தாலும், குறைவாக இருந்தாலும் அவர்களே அதை சரி செய்துகொள்வதற்கும், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் வரும்போது communal rotation-லிருந்து எந்தப் பகுதியை எப்படி வைக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்வதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கே வருகின்ற இச்சட்டத் திருத்தம் வழிவகை செய்கின்றது. மேலும், புதிதாக ஆழ்குழாய்க் கிணறு அமைப்பது, புதிதாகத் தண்ணீர் தொட்டி அமைப்பது, இப்படி நகரத்தில் செய்கின்ற பணிகள் அனைத்தையும் கண்காணிக்கின்ற அதிகாரத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குத் தருகின்றது இது. எனவே, இது ஓர் அவசியமான சட்டத் திருத்தம். இது நகரங்கள் வளர்வதற்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதற்கும் வகை செய்கின்ற சட்டத் திருத்தம். எனவே, இதனை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 102 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 102 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்34/2022) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.